**ஜனவரி – 23**

# TNPSC துளிகள்

- பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட பசுமை எரிபொருட்கள் பற்றிய ஒரு கூட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டைத் தொடங்குவதற்கு வேண்டி இந்தியாவும் டென்மார்க்கும் சமீபத்தில் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டன.
    - இந்த ஒப்பந்தமானது, ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட "2020-2025 ஆம் காலக் கட்டத்திற்கான பசுமை மூலோபாயக் கூட்டாண்மை - செயல் திட்டத்தின்" ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## உலக சமூக ஆஸ்கார் விருது 2021

- சூர்யா, ஜோதிகா மற்றும் உதயநிதி ஆகியோர் உலக சமூக ஆஸ்கார் விருதுகளுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- மேலே குறிப்பிடப்பட்ட விருதுகள், மனிதச் சமூகங்களை வலுப்படுத்துவதில் குறிப்பிடத் தக்க பங்களிப்பை ஆற்றிய மற்றும் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய பிரபலங்களுக்கு ஒரு அங்கீகாரத்தினை வழங்குகின்றன.
- நடிகரும் அரசியல்வாதியுமான உதயநிதியும் 2021 ஆம் ஆண்டிற்கான உலக சமூக ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- அவர் பல சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இளைஞர்களை அரசியலுக்கு வர ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதன் காரணமாக இவர் இந்த விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
- உலக சமூக ஆஸ்கார் விருதானது, அமெரிக்காவில் பிப்ரவரி 19 அன்று நடைபெற உள்ள சர்வதேச வளர்ந்து வரும் நாயகர்களுக்கான விருது என்ற ஒரு விருது வழங்கும் விழாவில் வழங்கப்பட உள்ளது.




# தேசியச் செய்திகள்

## அரசு டிஜிட்டல் திட்டம்

- அரசு டிஜிட்டல் (மின்னிலக்கம்) திட்டமானது, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்

துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.

- இந்தத் திட்டமானது குடிமக்களுக்கு அரசுச் சேவைகளை வழங்கும்.
- இது இந்தச் சேவைகளை வழங்குவதற்காக இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றைப் பயன்படுத்தும்.
- ஒரு திட்டம் அல்லது துணை நிறுவனத்தைப் பற்றி குடிமக்கள் விசாரிக்கத் தொடங்கும் முன்பே குடிமக்களுக்கு அதன் பயன்களை அடையச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியா-இஸ்ரேல் தொழில்துறை ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் தொழில் நுட்பப் புத்தாக்க நிதி

- இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகியவை இணைந்து, சமீபத்தில் தங்களது எட்டாவது ஆளுகைக் குழுச் சந்திப்பின் போது I4F என்ற துறையை (இந்தியா-இஸ்ரேல் தொழில் துறை ஆராய்ச்சி & மேம்பாட்டு தொழில்நுட்பப் புத்தாக்க நிதி) விரிவுபடுத்தின.
- I4F என்பது இந்தியா - இஸ்ரேல் தொழில்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தொழில் நுட்ப ப்புத்தாக்க நிதியாகும்.
- இந்த நிதியானது, தற்போது 5.5 மில்லியன் அமெரிக்க டாலராக விரிவுபடுத்தப் பட்டு உள்ளது.
- மூன்று ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த நிதி விரிவு படுத்தப்பட்டுள்ளது.
- அவை பின்வருமாறு
  - உடல்நலப் பாதுகாப்பில் மூலக்கூறு கண்டறிதலுக்காக வேண்டி, மத்திய அரசால் கண்காணிக்கப்படும் இணைய வசதியில் இயங்கும் நுண் உணர்விகள்.
  - நிகழ்நேர விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் தரவுச் சேகரிப்பில் இணைய வசதி கொண்ட செயற்கைக் கோள் தகவல்தொடர்பினைப் பயன்படுத்துதல்.

- NoMoreMos: இது கொசுப் பரவலைக் கட்டுப்படுத்தும் உயிரியல் சார்ந்த தீர்வு ஆகும்.





## சர்வதேசச் செய்திகள்

### முதல் BRICS ஷெர்பாக்கள் சந்திப்பு – 2022

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 18 – 19 ஆம் தேதிகளில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டின் முதல் BRICS ஷெர்பாக்கள் சந்திப்பில், 2021 ஆம் ஆண்டு BRICS அமைப்பிற்கு இந்தியா மேற் கொண்ட தலைமைத்துவத்திற்கு உறுப்பினர் நாடுகள் நன்றி தெரிவித்தன.
- 2022 ஆம் ஆண்டில் BRICS அமைப்பின் சுழற்சிமுறைத் தலைமைப் பொறுப்பை சீனா ஏற்றுள்ளது.
- BRICS என்பது ஐந்து பெரிய வளர்ந்து வரும் நாடுகளின் ஒரு குழுமமாகும்.

- அவை பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை ஆகும்.

### 2021 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான வார்த்தை




- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகமானது (OUP - Oxford University Press) தனது சமீபத்திய ஆராய்ச்சியின் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான வார்த்தையாக 'கவலை' (Anxiety) என்ற ஒரு வார்த்தையைத் தேர்வு செய்துள்ளது.
- "கவலை" (21%) என்ற வார்த்தையைத் தவிர, "சவால் (Challenging)" (19%), "தனிமை (isolate)" (14%), "நல்வாழ்வு (Well-being)" (13%) மற்றும் "தாங்குதிறன் (resilience)" (12%) ஆகியவையும் குழந்தைகளுக்கான முதல் ஐந்து வார்த்தைகளாக தேர்வு செய்யப்பட்டன.
- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகமானது 2020 ஆம் ஆண்டின் குழந்தைகளுக்கான வார்த்தையாக கொரோனா வைரஸ் என்ற வார்த்தையைத் தேர்வு செய்திருந்தது.

## பொருளாதாரச் செய்திகள்

### முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை





- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டு அமைப்பின் (UNCTAD - UN Conference on Trade and Development) முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு என்ற அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உலகளாவிய அன்னிய நேரடி முதலீடுகள் 2021 ஆம் ஆண்டில் வலுவான மீட்சியைக் கண்டன.
- இது 77 சதவீதம் உயர்ந்து 1.65 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டில், அன்னிய நேரடி முதலீட்டு வரவானது 929 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.

- இந்த அறிக்கையின்படி, வளர்ந்த நாடுகள் இதுவரையில் மிகப்பெரிய உயர்வைக் கண்டன.
- 2021 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீடானது 2020 ஆம் ஆண்டில் இருந்ததை விட மூன்று மடங்கு அதிகமாக 777 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- இந்த அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கான அந்நிய நேரடி முதலீட்டு வரவானது 26 சதவீதம் குறைவாக இருந்தது.
- ஏனென்றால், 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பெரிய M&A ஒப்பந்தங்கள் (இணைப்புகள் மற்றும் கையகப்படுத்துதல் ஒப்பந்தங்கள்) மீண்டும் பதிவு செய்யப் படவில்லை.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஓமோ I - பழமையான மனித புதைபடிவங்கள்

- இதுவரை கண்டறியப்பட்ட மிகப் பழமையான ஹோமோ சேப்பியன் வகை புதை படிவங்களில் ஒன்றான ஓமோ கிபிஷ் I (Omo Kibish I), முன்பு நினைத்ததை விட சுமார் 35,000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்க செய்கின்றன.
- ஓமோ கிபிஷ் I என்பது 1967 ஆம் ஆண்டில் எத்தியோப்பியாவில் முதன்முதலில் கண்டு பிடிக்கப் பட்டது.
- நவீன மனிதனின் அனைத்து உருவவியல் பண்புகளையும் கொண்ட ஒரே புதைபடிவம் ஓமோ I ஆகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நட்சத்திர மதிப்பீட்டு முறை

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகமானது சமீபத்தில் ஒரு "நட்சத்திர மதிப்பீட்டு முறையை" அறிமுகப்படுத்தியது.

- குறுகிய காலத்தில் சுற்றுச்சூழல் அனுமதிகளை ஒரு திறம் மிக்க முறையில் வழங்கும் மாநிலங்களை இந்த அமைச்சகம் கண்டறியும்.
- இந்த அமைச்சகமானது, அத்தகைய மாநிலங்களுக்கு ஊக்கச் சலுகைகளை வழங்கி ஊக்குவிக்கும்.
- இதற்காக, நட்சத்திர மதிப்பீட்டு முறையானது மாநிலங்களுக்கு ஏழு என்ற அளவீட்டில் மதிப்பெண்களை வழங்குகிறது.
- ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கும் செயல்முறையை 80 நாட்களுக்குள் முடிக்கும் மாநிலங்கள் இரண்டு மதிப்பெண்களைப் பெறுகின்றன.
- 105 நாட்களில் முடிப்பதற்கு ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
- இந்தக் காலத்தை விட அதிகமாக எடுத்துக் கொண்டால் பூஜ்ய மதிப்பெண் வழங்கப் படும்.
- ஆய்விற்கு உட்பட வேண்டிய திட்டங்கள் 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தால், ஒரு மதிப்பெண் வழங்கப் படுகிறது.

### '2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருவநிலை' அறிக்கை

- இந்திய வானிலை ஆய்வு மையமானது, சமீபத்தில் தனது "2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் பருவநிலை" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- 1901 ஆம் ஆண்டில் இந்தியாவில் நாடு தழுவிய பதிவுகள் மேற்கொள்ள தொடங்கியது முதல் 2021 ஆம் ஆண்டு தான் இந்தியாவின் ஐந்தாவது வெப்பமான ஆண்டு என இந்த அறிக்கை கூறுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் இந்தியாவில் 1,750 என்ற அளவில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- 350 என்ற அளவிலான உயிரிழப்புகள் பதிவானதுடன், மகாராஷ்டிரா மாநிலம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட ஒரு மாநிலமாக உள்ளது.
- அங்கு தீவிரமான வானிலை நிகழ்வுகளில், மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழைப் பொழிவே அதிக உயிரிழப்புகளுக்கு காரணமாக இருந்தன.
- அதைத் தொடர்ந்து வெள்ளம், கனமழை, நிலச்சரிவு ஆகியவை உள்ளன.
- இந்தியாவில் வருடாந்திர சராசரி வெப்பநிலையானது 1901-2021 ஆம் காலகட்டத்தில் 100 ஆண்டுகளுக்கு 0.63 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் உயர்வைக் கண்டுள்ளது.
- 1961-2010 காலகட்டத்தின் அடிப்படையில் இந்தியா முழுவதும் 2021 ஆண்டில் ஏற்பட்ட வருடாந்திர சராசரி மழைப்பொழிவானது அதன் நீண்ட கால சராசரி என்ற அளவில் 105% ஆகும்.


## மாநிலச் செய்திகள்

### மணிப்பூர், மேகாலயா, திரிபுரா – 50வது மாநில தினம்

- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 21 அன்று, மணிப்பூர், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்கள் தங்களது 50வது மாநில தினத்தைக் கொண்டாடுகின்றன.
- இந்த மாநிலங்கள், 1971 ஆம் ஆண்டு வடகிழக்குப் பிராந்தியம் (மறுசீரமைப்பு) என்ற சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டன.
- மணிப்பூர் மற்றும் திரிபுரா போன்ற சுதேச அரசுகள் 1949 ஆம் ஆண்டில் இந்தியாவுடன்

இணைக்கப்பட்டன.

- பின்னர் அவற்றிற்கு ஒன்றியப் பிரதேச தகுதிநிலை வழங்கப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டில், மேகாலயா மற்றும் திரிபுரா ஆகியவற்றிற்கு முழு மாநில தகுதி நிலை வழங்கப்பட்டது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இளையோர் பருவநிலை சாம்பியன்




- உள்ளடக்கக் கருத்து உருவாக்குபவரும் நடிகையுமான பிரஜக்தா கோலி இந்தியாவின் முதல் ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் (UNDP - UN Development Programme) இளையோர் பருவநிலை சாம்பியன் ஆனார்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வளர்ச்சித் திட்ட அமைப்பின் உடனான தனது கூட்டாண்மையின் கீழ் இவர் இந்தப் பட்டத்தை வென்றார்.
- பல்வேறு உலகளாவிய சமூகப் பிரச்சாரங்கள் மூலம் மனநலம், பெண் குழந்தை கல்வி மற்றும் பெண்களின் உரிமைகள் ஆகியவற்றில் அவர் ஆற்றியப் பங்களிப்பின்

காரணமாக இந்தப் பட்டம் அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

- இந்திய யூடியூபர் மற்றும் நடிகையான இவர், தனது வெகு பிரபல யூடியூப் சேனலான "மோஸ்ட்லிசேன்" (Mostlysane) என்பதின் மூலம் பிரபலமாக அறியப்படுகிறார்.

## உலகின் மிக வயதான மனிதர்

- கின்னஸ் உலக சாதனை ஒன்றினைப் படைத்தவரான ஸ்பெயின் நாட்டின் ஒரு ஆண் மகன், சாட்டர்னினோ டி லா ஃபியூன்டே கார்சியா (Saturnino de la Fuente García) தனது 112 வயது மற்றும் 341 நாட்களில் காலமானார்.
- 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், அவர் சரியாக 112 ஆண்டுகள் மற்றும் 211 நாட்களை எட்டிய போது, உலகின் மிக வயதான மனிதர் என்ற ஒரு சாதனையைச் சாட்டர்னினோ படைத்தார்.
- இவர் 1909 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று ஸ்பெயினில் உள்ள லியோனின் புவென்டே காஸ்ட்ரோ என்ற பகுதியில் பிறந்தார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★